RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt23118

OPEN ACCESS

# நற்றிணையில் மெய்ப்பாட்டியல் கோட்பாடு

**இரா. பேபி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# The Principles of Realism in Natrinai

**R. Baby [a, *]**

[a] Department of Tamil, PSG College of Arts& Science Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: babyrmahi@gmail.com

Received: 26-07-2022
Revised: 23-10-2022
Accepted: 05-11-2022
Published: 03-12-2022

Check for updates

**ABSTRACT**

The definition of reality, the truths and types of truths of the Tholkappiar, and the views of other scholars on reality have been dealt with. The context and background of the realism that is mostly featured in the four hundred songs in Natrinai are given. The Natrinai songs are classified on the basis of realism. The majority of these realities are the result of a man and woman's love and separation. In particular, they repeatedly emphasize that the woman lead herself is the most affected by grief and sickness. It was evident that the circumstances of the time had been the cause of it. There was a time when women did not have the right to speak. At no point in time had the woman lead spoken of her love, desire, or longing. It is only through her sufferings in reality that one can see the position of the woman lead as perceived by her friend or birth mother.

**Keywords:** Reality Jewelry, Crying, Depression, Delusion, Fear, Pride

## முன்னுரை

மெய் - உடம்பு பாடு - படுதல் தோன்றுதல் என்று பொருள்படும். அதாவது உள்ளத்து உணர்ச்சிகள் பிறருக்கு புலனாகுமாறு புற உறுப்புக்களில் தோன்றுவது மெய்ப்பாடாகும் (Selvaraju, 2018). தமிழில் தோன்றிய முதன்மையான நூல் தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள், என்ற முப்பொருள் பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவுக்கு ஒன்பது இயல்களாக இருபத்து எழு இயல்களாக அமைந்துள்ளது. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல் ஆறாவதாக அமைந்துள்ளது. செய்யுளியலில் மெய்ப்பாட்டைப் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடும்போது

"உய்த்துணர்வு இன்றித் தலைவருபொருளான்

மெய்ப்படமுடிப்பது மெய்ப்பாடாகும்"

என்று கூறுகிறார். "யாதானுமொன்றைக் கூறியவழி யதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலின்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம் என்று கூறுகிறார் (Subramanian, 2000). மெய்ப்பாடுகளே மனித உணர்களை வெளிப்படுத்தும் வாயில்களாகும்.

## ஆய்வுமுறை

நற்றிணையில் மெய்ப்பாட்டியல் கூறுகளை கண்டறியும் நோக்கில் இந்தக்கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது (Ramaiya Pillai, 2015). ஆய்வின்முதற்கட்டமாக தொல்காப்பியர்

குறிப்பிடும் மெய்ப்பாட்டியல் அதன் வகைகள் வாசிக்கப்பட்டன. அதன்பின்பு சங்க இலக்கியங்களில் சிறப்பான நூலான நற்றிணை முழுவதும் வாசிக்கப்பட்டன. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பது ஆராயப்பட்டன. அவர் குறிப்பிடும் பெரும்பாலான மெய்ப்பாடுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் சில மெய்ப்பாட்டுக் கூறுகள் மட்டுமே அதிக அளவில் உள்ளன. அந்தக் கூறுகள் இடம்பெற்றுள்ள திணைகள் குறித்தும், அதற்கான பின்புலம் குறித்தும், அந்தக் கூறுகளை திரும்பத் திரும்ப வலியுறுவதற்கான சமூகக் காரணங்களை ஆராய்வதாகவும் அமைகின்றது. இதன் மூலம் சங்ககால மக்களின் வாழ்வியல் நிலையையும், அவர்களின் மெய்ப்பாட்டு உணர்வுகளை மறைக்காமல் வெளிப்படுத்தும் தன்மை உடையவர்களாகவும், மிக எளிமையான வாழ்வு உடையவர்களாக இருந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றது.

## ஆய்வு நூல் பற்றிய குறிப்பு

சங்க இலக்கியங்களில் முதலில் வைத்து எண்ணப்படும் சிறப்பினை உடைய நற்றிணை ஆய்வு நூலாக எடுத்துக்கொள்ளப்பட்டது. சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் முதலில் வைத்து எண்ணப்படும் சிறப்பையும், நல்ல திணை என்ற அடைமொழியுடன் அழைக்கப்படும் சிறப்பையும் உடையது. நானூறு பாடல்கள் கொண்டுள்ளதால் நற்றிணை நானூறு என்று அழைக்கப்படுகிறது (Ramaiya Pillai, 2015). 175 புலவர்களால் பாடப்பெற்ற 400 அகப்பாடல்களைக் கொண்டுள்ளது. இதனைத் தொகுத்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. நற்றிணைப் பாடல்கள் 9அடி முதல் 12 அடி வரை அமைந்துள்ளன. நற்றிணைப் பாடல்களில் உள்ள மெய்ப்பாடுகள் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## மெய்ப்பாடு விளக்கம்

“உய்த்துணர்ச்சியின்றிச் செய்யுளிடத்துச் சொல்லப்படும் பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பல், மெய்மயிர் சிலிர்த்தல் முதலாகிய சத்துவம் வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம். அதாவது ஒரு இலக்கியத்தை வாசிக்கும் போது அதன் பொருளைப் புரிந்து கொள்ள ஆழமாக சிந்திக்காமலே, அவ்விலக்கிய நிகழ்வுகள், வாசகரின் மனதில் தோற்றுவிக்கும் உணர்வுகளை நாம் மெய்ப்பாடு என்று புரிந்து கொள்ளலாம்.

மெய்ப்பாடென்பது “உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்கும் புலப்படுவதோரற்றான் வெளிப்படுதல்” உலகில் வாழும் அனைத்து மக்களும் ஒரே மாதிரியான மனக்கிளர்ச்சியைத் தூண்டும் சூழல்களில் ஒரே மாதிரியான முக பாவங்களை வெளிப்படுத்துகின்றனர். இந்த மனித உணர்வுகளையே தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் வெளிப்படுத்தியுள்ளார் (Subramanian, 2000).

மெய்ப்பபாடு குறித்து மிகப்பல ஆய்வுகள் வந்துள்ளன. குறிப்பாக ரசக்கோட்பாடுடன் மெய்ப்பாடு ஒப்புமை உடையது. மேலைநாட்டு உருக்கோட்பாட்டுடன் தொடர்புடையது என்று பல அறிஞர்கள் ஆய்வு செய்து நிறுவியுள்ளனர். சிலர் இரசக் கோட்பாட்டைத் தொல்காப்பியர் தழுவி எழுதியுள்ளனர் என்று கூட வாதிப்பது உண்டு. நவரசங்களுக்கும் மெய்ப்பாடுகளுக்கும் அடிப்படையில் பல மாற்றங்கள் உள்ளன. ரசம் நாடகம் சார்ந்தது. மெய்ப்பாடு உலகியல் சார்ந்தது. இலக்கியம் சார்ந்தது. மெய்ப்பாடு குறித்து அறியவேண்டுமென்றால் தொல்காப்பியர் கூறும் எட்டு வகை மெய்ப்பாட்டையும் அதன் நிலைக்களன்களையும் அறிந்திருத்தல் அவசியம். எனவே அவை சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளன.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டுவகையான மெய்ப்பாடுகள் இருப்பதாகத் தொல்காப்பியர் விளக்குகிறார். இந்த ஒவ்வொரு மெய்ப்பாடும் நான்கு நிலைக்களன்கள் வழி தோன்றும் என்றும் கூறுகிறார் (Subramanian, 2000).

### நகை

எள்ளல் (இகழ்தல்), இளமை, பேதமை (அறிவின்மை), மடமை (தவறாகப் புரிந்து கொள்ளல்)

### அழுகை

இழிவு (இகழ்தல்), இழவு (உயிர் இழத்தல்), அசைவு (சிறப்புக் குறைதல்), வறுமை

### இளிவரல் (மற்றவர்கள் முன் இழிவுக்கு இலக்காகுதல்)

மூப்பு, பிணி (நோய்), வருத்தம், (மென்மை (பிறர் முன் மெலியராதல்)

### மருட்கை (ஆச்சர்யம், வியப்பு)

புதுமை (முன்பு இல்லாதது), பெருமை (இதற்கு முன் காணாத அளவு பெரியதாதல்), சிறுமை (மிகவும் சிறியதாதல்), ஆக்கம் (ஒன்றன் வளர்ச்சி)

### அச்சம் (பயம்)

அணங்கு (தெய்வம்), விலங்கு, கள்வர், தம் இறை (அரசன், தலைவன்)

### பெருமிதம்

கல்வி, தறுக்கண் (போர் வீரம்), புகழ், கொடை

### வெகுளி

உறுப்பறை (உறுப்புக்களை வெட்டுதல்), குடிகோள், அலை (அலைத்து வருத்துதல்), கொலை

### உவகை

செல்வம் உடைமை, புலன் (அறிவுடைமை), புணர்வு (காதல் கூட்டத்தால்), இன்ப விளையாட்டு என்ற எட்டு வகை மெய்ப்பாடுகளும் இவை தோன்றும் 32 சூழல்களும் ஆகும். இவையன்றி மேலும் ஒரு 32 மெய்ப்பாட்டு நிலைக்களன்களையும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

“ஆங்குஅவை ஒருபாலாக ஒருபால்
ஊடமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்று கனவு எனாஅ
முனிதல் நினைதல் வெருஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவு உயிர்ப்பு எனாஅக்

கையிறு இடுக்கண் பொச்சாப்பு பொறாமை

வியர்த்தல் ஐயம் மிகை நடுக்கு எனாஅ

இவையும் உளவே அவை அலங்கடையே"

அதாவது உடமைகள், அவற்றை எண்ணி மகிழ்தல் நடுவுநிலைமை, அருளொடு இருத்தல், இயற்கைப்பண்பு அடக்கம், ஒழுக்கம், அன்பு அளவில் மிகுதல், பிறரைத் துன்புறுத்தல், ஆழ்ந்து எண்ணுதல், வாழ்த்தல், தீமைக்கு நாணுதல், உறக்கம், அரற்றுதல், கனவு, வெறுத்தல், நினைத்தல், அஞ்சுதல், சோர்ந்திருத்தல், கருதுதல், ஆராய்தல், விரைதல், நெடுமூச்சு, செயலற்ற தன்மை, துன்பம், மறதி, பொறாமை, மெய்ப்புழுக்கம், ஐயம் உள்ளமிகுதி, நடுங்குதல் இவையும் உட்படும் என்று கூறுகிறார். இந்த மெய்ப்பாட்டுக் கூறுகள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையாகும் (Subramanian, 2000).

## நகை

சுவை எட்டனுள் முதல்நிலை பெறுவது நகைச்சுவையாகும். நகை என்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதல், அளவே சிரித்தல், பெருகச் சிரித்தல் என்ற மூன்று வகைப்படும். எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நான்காகும். எள்ளல் என்பது பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட வழி தான் நகுதலும் என இரண்டாகும். தன் இளமையால் பிறரை நகுதலும், பிறர் இளமையால் தான் நகுதலும் என்ற இரண்டும். பேதமை என்பது அறிவின்மை. இது தன் பேதமையால் நகுதலும், பிறன் பேதமையால் நகுதலும், பிறன் மடமையால் நகுதலும் என இரண்டாகும்.

பேதமை என்பதற்கும் மடம் என்பதற்கும் வேறுபாடு என்னவெனின் பேதமை என்பது அறிவு இல்லாமை, உய்த்துணராமை, ஒரு செயல் செய்தற்குரிய அறிவின்மை, மடம் என்பது அறியாமை, ஒரு செயல் பற்றிய அறிவிருந்தும் செய் வகையறியாமை ஆகும். நற்றிணையில் இடம்பெற்றுள்ள நகையும் அதன் வகை சார்ந்த மெய்ப்பாடுகள். தலைவன் தலைவியை விட்டுப் பிரிதலை பொறுத்துக் கொள்ளமுடியாத நிலையில் தலைவி தோழியிடம் எள்ளல் தன்மையுடன் கூறுகிறாள்.

எள்ளல் - 129 (கு), 196 (நெ),214 (பா), இளமை - 190(கு), பேதைமை - 116, 106(நெ), 183(நெ), மடமை - 47(கு),64, 134,173, 99(மு) 334(கு) என்ற பாடல்களில் நகை சார்ந்த மெய்ப்பாட்டியல் கூறுகள் அமைந்துள்ளன.

## அழுகை

தலைவன் தலைவியைக் பார்க்க தோழியிடம் இரந்தான். அதனை தோழி மறுத்தாள். உடனே தலைவன் பனைக்கருக்கால் செய்த குதிரையிலேறி வில்லாப்பூ மாலையணிந்து வந்துள்ள தன் நெஞ்சினை ஆறுதல் படுத்துகிறான். மடலேறுவேன் என்று தோழியிடம் கூறுகின்ற நேரத்தில் தன்னை இழிவுபடுத்திக் கொள்வதையும், தலைவன் பிரிவு இழத்தலுக்கு சமமானது என்று தலைவியும், தலைவியைப் பிரிதலே வறுமை என்றும் கூறுகிறார்.

இழிவு - 146(கு), 150(ம),154(கு),197(பா), 248(மு), இழவு - 93, 43, (உயிர் இழத்தல்) 284(பா), அசைவு - 133, 160, 56, ள, வறுமை - 262(பா), 290(ம) என்ற பாடல்களில் அழுகை சார்ந்த மெய்ப்பாட்டியல் கூறுகள் அமைந்துள்ளன.

## இளிவரல்

வரைவு நீட்டித்தலால் தலைவி நடுக்கமடைதலால் பிணிக்கு உள்ளாகிறாள். தலைவன் பிரிதலால் பசலை நோய்க்கு ஆளாகிறாள். மேலும் மெலிதல், வளை நெகிழுதல், வளை கழலுதல், வருந்துதல், கண்ணீர் வடித்தல் போன்ற மெய்ப்பாடுகளை உடையவளாக த¡லைவி உள்ளாள். தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை இரங்கத்தக்கதாயுள்ளது. கண்களும், தோளும், வெப்பமான

பெருமூச்சும், அம்புபட்ட மான்போல வருந்தினாள். இரவுக்குறியில் தலைவன் வரும்வழியில் உள்ள ஆபத்தை நினைத்து வருந்தி கண்ணீர் வடிக்கிறாள். தலைவன் பிரிவை நினைத்து வருந்துகின்ற பாடல்களே அதிகம் இடம் பெற்றுள்ளன. நெய்தல் நிலத்தலைவியின் நிலை மிகவும் வருந்ததக்கதாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. தலைவனும் தலைவியின் பிரிவைப் பொறுக்கமுடியாமல் தன் நெஞ்சுக்கு சொல்கின்றவையும், பாங்கனிடம் சொல்கின்ற நிலையும் வருத்தம் என்ற மெய்ப்பாட்டியல் நிகழ்வில் அடங்கும்.

பிணி - 53(கு), 70, 73, 78, 94,(நெ),107(பா) 108(கு), 109(பா), 116(கு), 123(நெ),133(கு), 137(பா),167(நெ), 173(கு), 175(நெ), 191(நெ), 205(பா), 236(கு), 272(நெ), 275(நெ), 282(கு), 288(கு), 289(மு), 304(கு), 322(கு), 329(பா).

வருத்தம் - 5, 12, 17, 39,(கு) 54, 61,65, 66, 76, 77, 82, 83,89(மு) 92(நெ), 97(மு), 101(நெ) 103(பா), 108, 117(நெ), 118(பா), 138(நெ), 152(நெ), 157(பா), 162(பா), 163(நெ), 174(பா), 177(பா), 178(நெ), 192(கு), 193(பா), 195(நெ),198(பா), 199(நெ),204(கு), 263(நெ),274(பா), 286(பா),292(கு), 308(பா), 316(மு), 317(கு), 325(பா),348(நெ),

மென்மை - 95, 128, 240(பா), அதிகம் இடம்பெறுவது தலைவன் தலைவியை விட்டுப் பிரிதலால் ஏற்படும் வருத்தமே காரணமாக அமைகின்றன. பிரிதல் என்பது

1. பொருள் தேடச் செல்லுதல் நிமித்தம் காரணமாக
2. இரவுக்குறியில் வரும் தலைவன் வரும் வழியில் உள்ள ஆபத்தை நினைத்து வருந்துதல்
3. அவன் பொருள்தேடி திரும்பி வருதலில் கால நீட்டிப்பு காரணமாக ஏற்படும் வருத்தம் ஆகும். அச்சம்

இரவுக்குறியில் தலைவன் வரும் வழியில் விலங்கினாலும், இயற்கை சீற்றத்தினாலும் ஏற்படுகின்ற துன்பத்தை நினைத்து தலைவி அச்சம் கொள்கிறாள். மேலும் கள்வர்களாலும், தலைவனின் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்று நினைத்து அச்சம் கொள்கிறாள். தோழி தலைவனிடம் இரவுக்குறியில் உள்ள ஆபத்தைக் கூறி தலைவியை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று அறத்தோடு நிற்கிறாள். இது போன்ற மெய்ப்பாட்டியல் நிகழ்வுகளும் தலைவன் தலைவியின் அழகிலே தன்னை இழந்து விடுவதைப் போன்றும், தன் நெஞ்சிற்கு சொல்லிக் கொள்வதைப் போன்ற போன்ற மெய்ப்பாடுகளும, தலைவிக்கு தோழி அறிவுரை கூறுவதைப் போன்றவையம், தலைவனின் பிரிவால் அதிகம் உணர்ச்சி வயப்பட்டு தலைவனின் பிரிவை தாங்க மாட்டாதவளாக தலைவியிள் நிலையை எடுத்திமியம்புகின்றவையும் உள்ளன.

அணங்கு - 358(நெ), விலங்கு - 214, 34(கு), 51, 114, 144(கு) 151, 156(கு) 158(கு),168(கு),255(கு), 261(கு), 33, கள்வர் - 28, 164(பா), தம் இ. றை - 104(கு)

## நகை

தலைவன் தலைவியை விட்டுப் பரிந்து பொருள் தேடச்செல்கிறேன் என்று கூறுவதைக் கேட்டு தோழியும் தலைவியும் எள்ளி நகையாடுகின்ற நிலையும், தலைவியின் நிலை அறியாத நற்றாயும், செவிலித்தாயும் வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துதல் பேதமையினால் தான். தலைவியைப் பிரிந்து சென்றதால் ஏற்பட்ட துன்பம் கொடியது. துன்பத்தில் என்னை விட்டுச் சென்ற தலைவர் எனக்கு உதவமாட்டார் என தலைவி கூறுகின்ற மெய்ப்பாட்டியல் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

எள்ளல் - 129(கு), 196(நெ),214(பா), இளமை - 190(பா), பேதைமை - 116,106(நெ),183(நெ), மடமை - 47(கு)64, 134,173,99(மு), 334(கு)

## அழுகை

தலைவியின் பிரிவைப் பொறுக்கமுடியாத தலைவன் இரவுக்குறியில் வருகின்றான். தோழி மறுத்துவிடுகின்றாள். அப்போது தலைவன் பனங்கருக்கினால் குதிரை செய்து தலை வில்லாப் பூக்களை அணிந்து வந்துள்ள தன் நெஞ்சிற்க சொல்லிக் கொள்கிற நிலையில் தலைவன் தன் நிலையை

இழிபுபடுத்திக் கொள்கின்ற நிலையைக் காணமுடிகின்றது. தலைவியைப் பிரிதலே வறுமை என்றும், அதுவே என் இழவு என்றும், தலைவன் பொருள் தேடச் செல்கையில் என் நெஞ்சும் அவர் உடனே சென்றுவிட்டது. என் பசலையைக் கண்டு திரும்பி வந்த நெஞ்சு என்னை அறியாமல் அயலாரிடம் சென்றுவிட்டது என்று தலைவி புலம்புகின்றாள்.

இழிவு - 146(கு), 150(ம)154(கு)197(பா) 248(மு), இழவு - 93,43, 284(பா)290(ம), அசைவு - 56, 133, 160, வறுமை - 262(பா)

## மருட்கை

தலைவியை விட்டுப் பிரிந்து சென்ற தலைவனின் பிரிவைப் பொறுக்கமுடியாமல் மலை அழுகின்றது. தன் கண்ணீரை அருவியாகக் கொட்டுகின்றது. (பெண்ணியம்) காட்டுக்கோழி பேடையை விரும்பும் தலைவி முன்பு நாமும் பெருமையோடு நிற்போம் என்று தலைவன் தேர்ப்பாகனிடம் கூறுகின்றான். நட்பு குறைந்து கொண்டே வந்து இறுதியில் இல்லாமல் போய்விடுமோ என்ற நிலையில் சிறுமை மெய்ப்பாடு உள்ளது.

புதுமை - 88, 201, 112(கு), பெருமை - 21, 166(பா), 202(பா), சிறுமை - 72, 90(ம), 160(கு)

## பெருமிதம்

கற்பு வாழ்வில் தலைவன் கொண்டு வந்த பொருளை சிறுகுடிக்கு மட்டுமல்லாமல் சுற்றத்தார்க்கு பகிர்ந்தழித்து வாழ்வாள் என்ற பெருமை நிலையிலும், தலைவன் வேற்றரசனோடு போர் செய்து வெற்றியைப் பெருவான் என்ற நிலையிலும் பெருமிதம் ஏற்படுகின்றது.

தறுக்கண் - 85,190, 333(பா), புகழ் - 182,

## வெகுளி

தலைவியின் உறுப்புகள் தலைவனை வருத்துகின்றன. அதனால் தலைவன் காமம் கைக்கடந்து போனால் காத்துக் கொள்ளுதல் எளிதாமோ? என்கிறான். அன்னையின் சினம் அலைப்புறுதலையும், கொல்லிப்பாவை போன்று தலைவி தன்னை வருத்துவதாக தன்னை கொலை செய்கிறாள் என்று கூறுகின்ற நிலையைக் காண முடிகின்றன.

உறுப்பறை - 39(கு), 98.

அலை - 27

கொலை - 185(கு)

## உவகை

மீன் செல்லும் நீர் வழி போல செல்வம் மறைந்து போகும். ஆதனால் இல்லறமே சிறந்தது என்று தலைவன் கூறுகின்றான். செல்வத்தைக் தேடிக் கொண்டுவந்து தலைவியிடம் கொடுத்து இல்லறத்தில் சிறந்து நின்றான். சிற்றில் இழைத்தல், நீராடுதல், குன்றையுடைய தலைவனோடு விளையாடுதல் போன்றவையும் இடம்பெற்றுள்ளன.

செல்வம் உடைமை - 16,59,210(ம), புணர்வு - 297(கு), இன்ப விளையாட்டு - 9, 68(கு), 194, 204, 259(கு),324(கு) போன்ற மெய்ப்பாடுகள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன. மேலும், மெய்ப்பாடுகளின் வகைகளை

இன்புறல் - 3,22,75,81,192, நலிதல் - 257(கு), துஞ்சல் - 98,281(பா), மிகை நடுக்குதல் - 125,273, 293(பா),312(பா),381(ம), கைம்மிகல் - 185, அஞ்சுதல் - 4, 211(நெ),298(பா), 330(ம), மகிழ்ச்சி - 6, வாழ்த்துதல் -

8, அன்பு - 10,369, வெறுப்பு - 11, நலன் அழிதல் - 13,23, 25,26. நினைத்தல் - 19,42, நடுக்கமடைதல் - 71,86,100(ம),182(கு), கனவு - 87(நெ), வாழ்த்தல் - 139(மு), நாணுதல் - 172(நெ) 326(கு) ஐயம் - 206(கு) இந்த மெய்ப்பாடுகளும் இடம்பெற்றுள்ள நிலையைக் காணமுடிகின்றது. தொல்காப்பியர் சொன்ன மெய்ப்பாட்டு கூறுகளுடன் நற்றிணைப தலைவிக்கு தோழி அறிவுரை கூறுவதைப் போன்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நற்றிணையில் தலைவனின் பிரிவால் அதிகம் உணர்ச்சி வயப்பட்டு தலைவனின் பிரிவை தாங்க மாட்டாதவளாக் பாடல்களில் இடம்பெற்றுள்ள மெய்ப்பாடுகளுடன் ஒப்பிட்டுக் காணும்போது பெரும்பான்மையான மெய்ப்பாடுகள் ஒத்துப் போகின்ற தன்மையைக் காண முடிகின்றது. தலைவன் தலைவியின் காதல் வாழ்வு, கற்பு வாழ்வு இரண்டிலும் மெய்ப்பாடுகள் மூலமே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டுள்ளனர் என்பதையும், தலைவிக்கு பேச்சுரிமை இல்லாத காலத்தில் அவளின் மெய்ப்பாடுகள் மூலம் தான் தன் கருத்தை பிறருக்கு வெளிப்படுத்துகின்ற நிலையைக் காணமுடிகின்றது. இந்த மெய்ப்பாடே மற்ற உயிர்களிடமிருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

## முடிவுரை

நற்றிணையில் மெய்பாட்டியல் கூறுகளை கண்டறிந்து அந்த மெய்ப்பாடுகளின் வகைகளில் அடங்கும் நற்றிணைப் பாடல்களைக் கண்டறியமுடிந்தது. சங்க இலக்கியங்களில் நற்றிணைப் பாடல்களில் மிகுதியாக இடம்பெற்றுள்ள மெய்ப்பாடு இளிவரலும், அதன் வகை சார்ந்த பிணி மற்றும் வருத்தம் சார்ந்த கூறுகளாகும். தலைவன் பொருள்தேடப் பிரிதல், இரவுக்குறியில் தலைவியைக் காண வருதல், திருமணத்தை நீட்டித்தல், போன்றவை தலைவியின் பிணிக்கும் வருத்தத்திற்கும், துன்பத்திற்கும் காரணமாக அமைகின்றன. தலைவன் மீது கொண்ட அன்பு அபரிமிதமானது மட்டுமல்லாமல் அளவில்லாததாக உள்ளது. தலைவன் தலைவி மீது கொண்ட அன்பை விட தலைவி தலைவன் மீது கொண்ட அன்பே உயர்ந்தது, பிரிவினால் அவள் உயிரையே இழந்துவிடுவாள் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றது. பெண்களுக்கான உலகம் ஆணைச்சார்ந்தே அமைகின்றன. ஆணின் உலகம் அப்படி இல்லை. சங்ககாலப் பெண்கள் உணர்வு மயமானவர்களாக உள்ளனர். பெண்கள் தலைவனின் பிரிவைத் தாங்கிக் கொள்ளமுடியாத மெல்லியலாளர்களாக இருந்துள்ளனர் என்பதை மெய்ப்பாடுகளின் வழி அறியமுடிகின்றது.

## References

Ramaiya Pillai, N. (2015) Nattrinai Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Selvaraju, N. (2018) Agaporul Kotpadu, New Century Book House, Chennai, India.

Subramanian, S, V. (2000) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

Vijayalashmi, T. (2019) Tamil Ilakkiya Kotpadu, Poovarasi, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License